விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 053 வள்ளுவர் ஆண்டு 2054 தை 27 வெள்ளிக்கிழமை (10.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மகா சங்கத்தினரை மீறி எதுவும் செய்ய முடியாது

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

மகாசங்கத்தினர் மற்றும் சிங்கள பௌத்த சக்திகளை மீறி இந்த நாட்டில் எதுவும் செய்ய முடியாது. அதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 11

## யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் நாளை திறப்பு

### ஜனாதிபதியும் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. 11



## எரிபொருள், மின்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது

### அரசிடம் மாற்றுத்திட்டம் இல்லை அமைச்சர் கஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

**எரிபொருள் மற்றும் மின் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர அரசிடம் மாற்றுத் திட்டம் எதுவும் கிடையாது என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் மற்றும் மின்கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்றுத் திட்டம் ஏதும் தற்போது கிடையாது. 24 மணித்தியாலங்களும் 11



### தீயில் எரிந்த நிலையில்

## பருத்தித்துறையில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

தீயில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நாகமுதலியார் வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கணேசராஜா ஜெகதா (வயது - 55) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார். 11

### பண்ணைக் கடலில்

## பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைக் கடலில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ஞானசேகரம் 11

### யாழ்.நகர்ப் பகுதியில்

## ஹெரோயினை ஊசி மூலம் ஏற்றிய 10 பேர் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணம்நகரில்ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக் கொண்டிருந்தபோது 10 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூலித் தொழிலில் ஈடுபடும் அவர்கள் யாழ்ப்பாணம் நகரில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் கூடி ஊசி மூலம் ஹெரோயின் 11

### பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக

## இந்திய அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்.விஜயம்



(யாழ்ப்பாணம்)

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்திய அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

இந்தியத் தகவல் ஒலிபரப்பு, 11

### ஜனாதிபதி ரணில்

## தொட்டிலை ஆட்டிவிட்டு பிள்ளையைக் கிள்ளுகிறார்

### 13 குறித்து சிறீதரன் ஆதங்கம்

சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று வழங்கப்படாவிடின் நாடு மீண்டுமொரு இருண்ட யுகத்தை நோக்கி செல்வதை எவராலும் தடுக்க முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதி ரணில் தொட்டிலை ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளுவதைப்போல செயற்படுவதாகவும் விமர்சித்தார். 03

## 4 பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

சதொச நிறுவனம் நேற்று முதல் அமுலுக்கு வரும்வகையில் மேலும் 4 பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் சிவப்பு 11

### பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால்

## நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் அபாயம்

### உதய கம்மன்பில

(கொழும்பு)

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வடகிழக்கு மாகாணம் மீண்டும் இணையும் என்பதோடு, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் நாட் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



## செல்வி. யாமினி பாஸ்கரன்

(பயிற்றப்பட்ட ஆங்கிலம் SLTS-I)

### சேவை விபரம்

| | |
|---|---|
| ஆசிரியர் யா / சங்குவேலி அ.த.க.பா | - 01.11.1996 - 18.05.1997 |
| ஆசிரியர் யா / இணுவில் மத்திய கல்லூரி | - 19.05.1997 - 14.01.1998 |
| ஆசிரியர் பயிற்சி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - 15.01.1998 - 31.12.1999 |
| ஆசிரியர் யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | - 01.01.2000 - 14.05.2013 |
| ஆசிரியர் மு / வித்தியானந்தாக் கல்லூரி | - 15.05.2013 - 15.05.2014 |
| ஆசிரியர் யா / உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் | - 16.05.2014 - 09.02.2023 |

செல்வி. **யாமினி பாஸ்கரன்** அவர்கள் இருபத்தேழு வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி இன்று தம் சேவையினின்றும் ஒய்வு பெறும் இவ் வேளையில் எம் மாணாக்கருக்கு ஆங்கில பாடத்தினை திறம்படப்போதித்தும் ஆன்மீக சிந்தனைகளை வழங்கி வளப் படுத்தியும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவியமைக்கும் பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன் அவரது ஓய்வுக்காலம் நலம் பெறவும் ஆன்மீகப் பயணம் தொடரவும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்

(14555)


## மக்கள் கஷ்டப்படும் வேளை

# ஜனாதிபதி தனது கனவுகளுக்கு பின்னால் ஓடுகிறார் - சஜித்

(மகியங்கனை)

பொது மக்கள் கஷ்டப்படும் வேளையில் ஜனாதிபதி தனது கனவுகளுக்குப் பின்னால் ஓடுகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மகியங்கனையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

ஜனாதிபதி தனது கனவு களை நனவாக்கி அக் கிராசன உரை நிகழ்த்தும் போது கிராமங்களில் உள்ள மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகவும், பெருந் தோட்ட செய்கைகளுக்குத் தேவையான பூச்சிக்கொல்லி களில் இருந்து, பாடசாலை மாணவர்கள் கற்கத் தேவையான பொருட்கள் இல்லை.

இவ்வாறு மிகவும் நிர்க்க திக்குள்ளாகிவிட்ட வேளை யில் உலகிற்கு கடனாளி யாக இருந்து கொண்டு, சுதந்திரதினத்தன்று நட மாடும் கழிவறைகளுக்காக 142 இலட்சம் செலவிடப் பட்டுள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித் தார்.

அக்கிராசன உரை நிகழ்த்துவதால் மட்டும் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது எனவும், யானை, மொட்டு அரசாங் கம் வீட்டுக்குச் செல்லும் போது இந்தப் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முடி யும்.

மக்கள்படும் துன்பம் அவர்களுக்குப் புரிவதில்லை எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், சாதா ரண மனிதனதும் துன் பத்தைப் புரிந்து கொள் ளும், மனித நேயம் மேலோங்கும் ஆட்சியொன் றின்யுகம் தான் இப்போது நாட்டிற்குத் தேவை என வும் தெரிவித்தார்.

ஒருபுறம் காஸ் விலை உயரும் போது, மறுபுறம் மின் கட்டணம் அதிகரிக் கப்படவுள்ளதாகவும், மக் களுக்கு பாதகங்களை விளை விக்கும் இந்த சீரற்ற அரசை ஒழிக்க ஒன் றிணைவோம் எனவும், தற்போது நாட் டிற்கு ஏற்று மதியை மையமாகக் கொண்ட, உற்பத்தியை மையமாகக் கொண்ட, டிஜிட்டல் பொருளாதார மொன்றே தேவை என வும், நவீன தொழில் நுட்பத்தின் மூலம் பாரிய விவசாயப் புரட்சியை ஏற் படுத்த ஐக்கிய மக்கள்சக்தி யுடன் இணைந்து கொள்ளு மாறு எதிர்க்கட்சித் தலை வர் வேண்டுகோள் விடுத் தார்.

நாட்டின் பொருளா தாரத்தை சீரழித்த ராஜ பக்ஷ குடும்பம் மீண்டும் யானையின் போர்வை யில் ஆட்சியைப் பிடிக்க முயற்சிப்பதாகவும், இனி மேல் பதவியேற்கும் மக் கள் பிரதிநிதிகள் அனை வரும் அரசியலை விடுத்து தேசசேவையை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இது நாட்டுக்கு நல்லது எனவும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இரத்தினம் தர்மலிங்கம் (மன்னவன்)

சுவிஸ்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01.10.1948 | 10.02.2020 |

ஓடி உருண்டது
உமைப்பிரிந்து மூன்றாண்டு
வாடி வதங்குகின்றோம்
உமைப்பிரிந்து எண்ணி நிதம்
மூன்றாண்டென்ன ஈராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில்
உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும்....

கரணவாய்,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

(C-5934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி தூதரகத்திற்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை துருக்கி தூதரகத்திற்குச் சென்று 12,000 இற்கும் அதிகமான மக்களைக் கொன்ற அண்மைய நிலநடுக்கங்கள் தொடர்பான இரங்கல் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

"இலங்கை மக்களின் பிரார்த்தனைகள் துருக்கிய அரசாங்கத்துடனும் மக்களுடனும் உள்ளன" என்று அவர் தெரிவித்தார். (நி)

# அதிகாரப் பரவலாக்கல்; பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

## மைத்திரி



(கொழும்பு)
நீண்ட காலமாக நீடித்து வரும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக, நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மதகுருமார்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தையின் ஊடாக சிறந்த தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும் பௌத்த பிக்குகளையும் தூண்டிவிடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 13 பிளஸை தருவதாக ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுக்கு உறுதியளித்தார். பசில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு 13 பிளஸை தருவதாக உறுதியளித்தார்.

இவ்வாறான உறுதிமொழிகளுக்குப் பின்னர்தான், இந்தப் பிரச்சினை நாட்டின் பூதாகரமானது. 87 களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் மாகாணசபை முறைமை வெற்றியா - தோல்வியா என ஆராயவில்லை.

நீண்ட காலமாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு, வடக்கு - கிழக்கு - தெற்கு அரசியல்வாதிகள், புத்திஜீவிகளை, மதகுருமார்களை ஒன்றிணைத்து சமாதானமானதொரு தீர்வை வழங்க வேண்டும்.

இதைவிட பாரிய பிரச்சினைகள் உலக நாடுகளில் ஏற்பட்டபோது, பேச்சுவார்த்தைகளின் ஊடாக அவை தீர்க்கப்பட்ட வரலாறுகள் உள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தையின் ஊடாக நிச்சயமாக தீர்க்கலாம் என நாம் உறுதியாக நம்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# கௌரமான அரசியல் தீர்வோடு எம் மண்ணில் வாழ விரும்புகிறோம்

## 13 குறித்து சிறீதரன் எம்.பி ஆதங்கம்

(கொழும்பு)
**சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று வழங்கப்படாவிடின் நாடு மீண்டுமொரு இருண்ட யுகத்தை நோக்கி செல்வதை எவராலும் தடுக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.**

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தமிழர்களுக்கு ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று மீண்டும் மீண்டும் கூறினால் இலங்கையினால் ஒருகாலமும் மீண்டெழ முடியாது.

எனவே, உலகிலுள்ள ஏனைய நாடுகளை போல சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலமே நாட்டில் நீதியை, அமைதியை கொண்டுவர முடியும்.

சிங்களவர்களும் தமிழர்களும் இலங்கையின் இரண்டு தேசிய இனங்களாக இணைந்து வாழக் கூடிய ஒரு அரசியல் உரிமையையே கோருகிறோம்.

அது அதியுச்ச அதிகாரப் பகிர்வாகவும் சமஷ்டி அடைப்படையில் மீளப்பறிக்கப் பட முடியாததுமாக இருக்க வேண்டுமென்று கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கோருகிறோம்.

ஒற்றையாட்சி என்ற கோசம் எழுப்பும் சிங்களத் தலைவர்களுக்கு இந்த நாடு இருண்ட யுகத்தை நோக்கி பயணிப்பது தெரிய வில்லை.

13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு 35 ஆண்டுகளாகிறது. இன்று அது உருத்தெரியாமல் போயுள்ளது.

28 இற்கும் மேற்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம், 13 ஆம் திருத்தத்தில் உள்ள சில விடயங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்துக்கு எதிராக இன்று பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஜனாதிபதியின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியப்படாது.



தீர்வை வழங்கப்போவதாக சர்வதேசத்துக்கு ஒரு முகத்தை காட்டும் ஜனாதிபதி ரணில், மறுபுறம் பௌத்த பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுகிறார்.

அவரின் இந்த செயல் தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பிள்ளையையும் கிள்ளிவிடுவது போன்று உள்ளது.

எங்களது மண்ணில் நாங்கள் கௌரவமான அரசியல் தீர்வோடு வாழ் வதற்கு விரும்புகிறோம். சமஷ்டி இன்றி வழங்கப்படும் தீர்வு இந்த நாட்டை மீண்டுமொரு இருண்ட யுகத்துக்கு இட்டுச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது என்றார். (நி)

# வரித் திருத்தத்தை மீளப்பெறாவிட்டால் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம்

## தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)
அண்மையில் முன்னெடுக்கப்பட்ட வரித் திருத்தத்தை அரசாங்கம் திரும்பப் பெறத் தவறினால், அடுத்த வாரம் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

கடந்த வருடம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் புதிய திருத்தத்தை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக கோரி வருகின்றனர்.

அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் இவ் வேளையில், இவ்வளவு அதிக வரி விதிப்பது நியாயமற்றது என தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

தங்களது கோரிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்தால் எதிர்வரும் 17ஆம் திகதி மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

# அதிகரிக்கும் டெங்கு

(கொழும்பு)
இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 647 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, ஜனவரி மாதத்தில் 6 ஆயிரத்து 497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 150 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (நி)

## வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக அலுவலகம் அறிவித்துள்ளது. அதன்படி, இந்த ஆண்டு சுமார் 70 ஆயிரம் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளதாக அறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எம்.பியாக பதவியேற்றார் பௌசி

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நேற்று வியாழக்கிழமை மீண்டும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்துள்ளார்.

இதற்கமைய அவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியின் பெயரிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி விரித்த வலையில் சிக்க வேண்டாம்- அநுர



(கொழும்பு)
13 ஆவ்து திருத்தச் சட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரித்த பொறி என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஜனாதிபதி அமுல்படுத்த மாட்டார் எனவும் தனது அதிகாரத்தை பாதுகாக்க மட்டுமே ஜனாதிபதி விரும்புவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி விரித்த வலையில் விழ வேண்டாம் என நாட்டு மக்களை கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

# பூநகரி பிரதேச செயலகம் கரம் போட்டியில் முன்னிலையில்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகள் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

குறித்த அரச அதிபர் வெற்றிக் கிண்ணத் தொடரில் கடந்த 7 ஆம் திகதி முதல் இடம்பெற்ற கரம் விளையாட்டில் மாவட்டச் செயலக அணி உட்பட கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலகங்களின் போட்டியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.





குறித்த நிகழ்வினை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீ மோகனன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. மா.அருந்தவராணி ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

போட்டிகளில் கலந்து கொண்ட போட்டியாளர்களுக்கு ஆசியினையும் வாழ்த்துக்களையும் மாவட்ட அரசாங்க அதிர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் வழங்கியிருந்தார்.

தொடர்ந்து போட்டிகள் மாலை வரை நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அந்த வகையில் இதுவரையில் இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் பூநகரி பிரதேச செயலகம் 34 புள்ளிகளையும் கண்டாவளை பிரதேச செயலகம் 27 புள்ளிகளையும் மாவட்டச்செயலகம் 10 புள்ளிகளையும் கரைச்சி பிரதேச செயலகம் 07 புள்ளிகளையும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 07 புள்ளிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-316)

# இருபது-20 போட்டிகளிலிருந்து ஆரோன் பின்ஞ் ஓய்வு



அவுதிஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ஆரோன் பின்ஞ், சர்வதேச இருபது-20 கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு நடை பெறவுள்ள இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் தான் விளையாட மாட்டேன் என உணர்ந்ததாகவும் இதுவே ஓய்வுப் பெற சரியான தருணம் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுப் பெற்ற 36 வயதான ஆரோன் பின்ஞ், தற்போது 12 வருட இருபது-20 கிரிக்கெட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிரான இருபது-20 போட்டியில், சர்வதேச இருபது-20 அறிமுகத்தை பெற்ற பின்ஞ், இறுதியாக கடந்த ஆண்டு அயர்லாந்து அணிக்கெதிரான இருபது-20 போட்டியில் விளையாடியிருந்தார்.

இதுவரை அவுஸ்திரேலியா அணிக்காக 103 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 19 அரைசதங்கள் 2 சதங்கள் அடங்கலாக மூவாயிரத்து 120 ஓட்டங்களை பெற்றுள்ளார். சராசரி 34.28 ஆகும். ஸ்டிரைக் ரேட் 142.5 ஆகும். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2762

கருணிகா




விதுனா




கவிநயன்




தாருஷ்




கபிலா




யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி | 9ம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
## திரு. கதிரவேலு -சுந்தரம்

தோற்றம்–10.06.1930
மறைவு–10.02.2003

அமரர்
## திருமதி. இராசம்மா-சுந்தரம்

தோற்றம்–06.05.1938
மறைவு–10.11.2014

**இருபதோ, ஒன்பதோ ஆண்டுகள் ஓடினாலும் எம் மனம் ஆறவில்லை,**
**உங்கள் மறைவால் எம் விழி ஈரமோ காயவில்லை,**
**நினைவுகள் எம்மிடம் நிஜத்தில் நீங்கள் உங்களை**
**உருக்கியே உலகில் எமை வாழ வைத்தீர்கள்.**
**எமதன்புத் தெய்வங்களே உங்கள் ஆத்மாக்களின் சாந்திக்காக**
**எல்லாம் வல்ல கிருஷ்ணரை பிரார்த்திக்கின்றோம்.**

இன்று எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்திக்காக இலகடி வல்வெட்டி பராசக்தி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(14540)

தகவல் – ப.பரமேஸ்வரன் 077 632 6240
இலகடி, உடுப்பிட்டி

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
உதயசீலன், தர்மசீலன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி யாழ்ப்பாணம் விஜயம்; யாழில் முன்னேற்பாட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் யாழ்ப் பாண விஜயம் தொடர்பிலான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி கலந்து கொள்ளும் குறித்த நிகழ்வுகளின் ஒழுங்கமைப்புகள் தொடர்பிலான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்ததில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் யாழ் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர், பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி, யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# நிறுத்தப்பட்ட வாகனத்தின் மீது மணல் வாகனம் மோதி விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மந்திகை புற்றளை பகுதியில் சட்டவிரோதமாக மணல் மண்ணை ஏற்றிச் சென்ற வாக னம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்ட வரகனம் ஒன்றுடன் மோதியதில் அந்த வாகனம் உருண்டு முன்னாலுள்ள தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதியதில் கம்பம் முறிவடைந்ததுடன் அருகிலுள்ள மதிலிலும் மோதியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# கத்தரிக்கன்றுகள் விசமிகளால் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள ஒருவரின் கத்தரித் தோட்டத்திற்குள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்கள் புகுந்து கத்தரிக் கன்றுகளை பிடுங்கி எறிந்து நாசம் செய்துள்ளனர்.

இது தொடர்பில்காணிஉரிமையாளரால் வல்வெட்டித் துறை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)





தெல்லிப்பழை மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியான அவசர மருந்தினை சிவபூமி அறக்கட்டளையின் வேண்டுதலையேற்று லண்டன் அபயம் அறக்கட்டளையின் உதவியில் நேற்று வழங்கப்பட்டது.

# கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்

## புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய 2022 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி கோப்பாய் கல்வி கோட்டத்தில் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் மற்றும் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் என்பன சாதனை படைத்துள்ளன.

அந்த வகையில் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் 62 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 23 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடு கையில் இது அதீதமான சித்தியடைவு என்பது குறிப்பிடத்தக்கது.

கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 7 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 5 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

### கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

ஜெ.சப்ரினா-176, எஸ்.ஹம்சாய்-174, ஜி.பவிசனன்-172, எம்.சுகானா-162, என்.யதுர்சா-161, கே.திஷானன்-156, வி.பிரியங்கா-156, ஏ.மகிசனா-155, எம்.சஸ்மிதா-155, கே.சஸ்வின்-155, ஜே.மதுஷிகா-154, எஸ்.சக்ஷனா-151, ஆர்.கஜம்பிகன்-151, வி.தக்ஷா-150, கே.துஷானா-149, கே.ஜலனுஜன்-148, ரி.சனுஜா-148, எல்.மதுஷாலினி-148, எஸ்.திஷாலினி-147, எஸ்.நிதுலன்-147, கே.லக்சயா-146, சி.சனுஜன்-144, ரி.சங்கவி-144.

### கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்

ஞா.சஞ்சீவா-165, ஞா.சங்கவி-162, ஜெ.ஆஷிகா-154, த.சஞ்சிகன்-149, மா.லதுசன்-148.

---

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

## யாழ்ப்பாணக் கம்பன் விழா- 2023

(இரண்டாம் நாள் நிகழ்வுகள்-11.02.2023 சனி)



காலை நிகழ்வுகள்

நேரம்
காலை 9.30 மணி

இடம்
நல்லை ஆதீன கலா மண்டபம்

மங்கல விளக்கேற்றல்
திரு.த.ஜெயசீலன் தம்பதியர்
(ஆணையாளர், யாழ்.மாநகர சபை)

திரு.கு.சிவஞானசுந்தரம் தம்பதியர்
(பிராந்திய முகாமையாளர், இலங்கை வங்கி)

கடவுள் வாழ்த்து
திரு.ஜெ.மதுஷிகன்

தலைமையுரை
பேராசிரியர்.மனோன்மணி சண்முகதாஸ்

தொடக்கவுரை
ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம், கோப்பாய்)

### சிந்தனை அரங்கு

தலைவர்
ஸ்ரீமத் மௌனமீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
(தருமை ஆதீனக் கிளைமடம், திருக்கேதீச்சரம்)

பொருள்:
'கம்ப சித்தாந்தம்'
கம்பனில் பதி உண்மை - ஏ.அனுஷாந்தன்
கம்பனில் பசு உண்மை - இ.ஜெயந்திரன்
கம்பனில் பாச உண்மை - கு.பாலசண்முகன்

குறிப்புரைகள்
கம்பவாரிதி இ.ஜெயராஜ்
முனைவர் இரா.மாது

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

மாலை நிகழ்வுகள்

நேரம்
மாலை 4.30 மணி

இடம்
நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்

மங்கல இசை
திரு.வி.சித்தார்த்தன்-திரு.வி.பிரதித்தன் குழுவினர்

மங்கல விளக்கேற்றல்
திரு.சூ.பாலசிங்கம் தம்பதியர்
(லண்டன்)
திரு.இ.ஜெயசேகரன் தம்பதியர்
(தலைவர், யாழ்.வர்த்தக சங்கம்)

கடவுள் வாழ்த்து
திரு. ந.பரந்தாமன்

தலைமையுரை
சி.சிறீதரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

தொடக்கவுரை
செல்வம் அடைக்கலநாதன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

### பட்டிமண்டபம்

நடுவர்
கம்வாரிதி இ.ஜெயராஜ்

பொருள்
'வள்ளுவர் காட்டும் அமைச்சனாய் கம்பனில் பெரிதும் முதன்மையுறுபவர்'

சுமந்திரனே! - இரா.செல்வவடிவேல்
பரா.ரதீஸ்
அனுமனே! - ஆறு.திருமுருகன்
ஸ்ரீ.பிரசாந்தன்
வீடணனே! - இரா.மாது
அ.வாசுதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் குதித்த பல்கலைக்கழக மாணவர்கள்



(கொழும்பு)

கொழும்பில் பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றிணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மகாபொல உள்ளிட்ட கொடுப்பனவுகள் சரியாக வழங்கப்படாமையை சுட்டிக் காட்டி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டது.

உணவு விற்பனை நிலையங்களிலும் உணவுகளின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளதன் காரணமாக தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தை மேற்கொள்ளும் மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் தமக்கான தீர்வு கிடைக்காத பட்சத்தில் இதை விடவும் மிகப்பெரிய ஆர்ப்பாட்டமொன்று கொழும்பில் முன்னெடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# தொடரும் மின்வெட்டுகளால் சேதமடையும் மின் உபகரணங்கள்

## குவியும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீண்டும் வழங்கும் போது பல வீடுகளில் மின் உபகரணங்கள் சேதமடைவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார். பல்வேறு பகுதிகளிலிருந்தும் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பினால் வழங்கப்படும் மின்சாரத்தின் தரம் சரியான முறையில்பேணப்பட வேண்டும் என்றும் விதானகே மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி)

---

**சாவகச்சேரி பிரதேச சபை**
**ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான மீள் கேள்வி கோரல்-2023**

- சுத்திகரிப்பு சேவை
- சாரதி சேவை
- மின்னியலாளருக்கான உதவியாளர் சேவை

1. சாவகச்சேரி பிரதேசசபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழுத் தலைவரால் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய கேள்வி தாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு சுத்திகரிப்பு சேவை, சாரதி சேவை, மின்னியலாளருக்கான உதவியாளர் சேவையினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2023.02.10 - 2023.02.24 பி.ப 3.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 2023.02.27 மு.ப 10.00 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி -2023.02.27 மு.ப 10.30 மணி**

2. தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கைக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் **சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம்** எனும் முகவரியிலுள்ள **தலைமை அலுவலகத்தில் மு.ப 9.00** மணி தொடக்கம் **பி.ப 03.00** மணி வரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்வி கோரல் தொடர்பான விரிவான மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் **சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில்** பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சேவை விபரம் | சேவை தேவைப்படும் இடம் | பால் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சுத்திகரிப்பாளர் | சாவகச்சேரி பிரதேசசபை | ஆண் | 10 | 01.03.2023 – 31.05.2024 |
| 2 | சாரதி | சாவகச்சேரி பிரதேசசபை | ஆண் | 2 | 01.03.2023 – 31.05.2024 |
| 3 | மின்னியலாளருக்கான உதவியாளர் | சாவகச்சேரி பிரதேசசபை | ஆண் | 1 | 01.03.2023 – 31.05.2024 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை**

**2023.02.10**

(C-5933)

---

உ

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# யாழ். கம்பன் விழா 2023



காலம்: 10,11, 12 வெள்ளி, சனி, ஞாயிறு

இடம்: நல்லை ஆதீன கலா மண்டபம் (காலை நிகழ்ச்சிகள்)
நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம் (மாலை நிகழ்ச்சிகள்)

நிகழ்ச்சிகள்

- மங்கல இசை
- இலக்கிய ஆணைக்குழு
- சிந்தனை அரங்கம்
- பட்டிமண்டபம்
- விவாத அரங்கம்
- வழக்காடு மன்றம்



கம்பன் தமிழமுது உண்டு களித்திட கைகூப்பி அனைவரையும் அழைக்கிறோம்.

லோ. துஷிகரன்
தலைவர்

கே.கஜரூபன்
செயலாளர்

கி.கிருபானந்தா
பொருளாளர்

- யாழ். கம்பன் கழகம்

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 99





வந்தியத்தேவன் அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டான். ஒரு கணம் பனை இலச்சினை பொறித்த அந்தத் தந்த மோதிரத்தைப் பார்த்தான். மறுபடி நிமிர்ந்து ராணிக்கு வந்தனம் கூற எண்ணிய போது பல்லக்கின் திரைகள் மூடிக் கொண்டிருந்தன.

ஆகா! பூரண சந்திரனை ராகு கவ்வும் போது சிறிது சிறிதாகக் கவ்வுகிறது. ஆனால் இந்தப் பல்லக்கின் திரைகள் அந்தப் பேசும் நிலா மதியத்தை ஒரு நொடியில் கபளீகரம் செய்து விட்டனவே!

“இனியாவது என்னைப் பின் தொடர்ந்து வராதே! அபாயம் நேரும் நின்று மெதுவாக வா!” என்று பல்லக்குத் திரைக்குள்ளிருந்து பட்டுப் போன்ற குரல் கேட்டது. பிறகு பல்லக்கு நகர்ந்தது; வீரர்கள் முன் போலவே அதன் முன்னும் பின்னும் சென்றார்கள்.

வந்தியத்தேவன் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு சாலையோரமாக ஒதுங்கி நின்றான். பழுவூர் ஆள்களில் தன்னை அணுகி வந்து பேசியவன், இரண்டு மூன்று தடவை திரும்பித் திரும்பிப் பார்த்ததை அவனுடைய கண்கள் கவனித்து உள்மனதுக்குச் செய்தி அனுப்பின.

ஆம் அவனுடைய வெளி மனம் பல்லக்கிலிருந்த பழுவூர் ராணியின் மோகன வடிவத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. இத்தனை நேரம் கண்டது, கேட்டது எல்லாம் உண்மைதானா? அல்லது ஒரு மாய மனோகரக் கனவா? இப்படியும் ஓர் அழகி, ஒரு சௌந்தரிய வடிவம், இந்தப் பூவுலகில் இருக்க முடியுமா!

அரம்பை, ஊர்வசி, மேனகை என்றெல்லாம் தேவமாதர்கள் இருப்பதாகப் புராணங்களில் சொல்வதுண்டு. அவர்களுடைய அழகு, முற்றும் துறந்த முனிவர்களின் தவத்தையும் பங்கம் செய்ததாகக் கேட்டதுண்டு. ஆனால் இந்த உலகத்தில் பெரிய பழுவேட்டரையர் இந்த மோகினியின் காலடியில் அடிமை பூண்டு கிடப்பதாக நாடு நகரங்களில் பேசுவதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம்.

இருந்தால், அதில் வியப்பு ஒன்றும் இராது! நரை திரை மூப்புக் கண்டவரும், தேகமெல்லாம் போர்க் காயங்களுடன் கடூரமான தோற்றங் கொண்டவருமான பழுவேட்டரையர் எங்கே? சுகுமாரியும் கட்டழகியுமான இந்த இளம் மங்கை எங்கே? இவளுடைய ஒரு புன்னகையைப் பெறுவதற்காக அந்தக் கிழவர் என்ன காரியந்தான் செய்யமாட்டார்? வெகு நேரம் சாலை ஓரத்தில் நின்று இவ்விதச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த பிறகு, வந்தியத்தேவன் குதிரை மேல் ஏறிக் கொண்டு மெள்ள மெள்ள அதைத் தஞ்சைக் கோட்டையை நோக்கிச் செலுத்தினான்.

சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பிரதான கோட்டை வாசலை அடைந்தான். கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலேயே நகரம் ஆரம்பமாகியிருந்தது. விதவிதமான பண்டங்கள் விற்கும் கடை வீதிகளும் பலவகைத் தொழில்களில் ஈடுபட்ட மக்கள் வாழும் தெருக்களும் கோட்டையைச் சுற்றி அடுக்கடுக்காக அமைந்திருந்தன.

வீதிகளில் போவோரும் வருவோரும் பண்டங்கள் வாங்குவோரும் விலை கூறுவோரும் மாடு பூட்டிய வண்டிகளும் குதிரை பூட்டிய ரதங்களும் நிறைந்து, எங்கும் ஒரே கலகலப்பாயிருந்தது.

அந்த வீதிகளுக்குள்ளே புகுந்து சென்று சோழ நாட்டுப் புதிய தலைநகரத்தில் வாழும் மக்களையும் அவர்கள் வாழும் விதத்தையும் பார்க்க வந்தியத்தேவனுக்கு மிக்க ஆவலாயிருந்தது. ஆனால் அதற்கெல்லாம் இப்போது அவகாசம் இல்லை. வந்த காரியத்தை முதலில் பார்க்க வேண்டும் வேடிக்கை பார்ப்பதெல்லாம் பிற்பாடு வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானத்துடன் வந்தியத்தேவன் தஞ்சை நகரின் பிரதான வாசலை அணுகினான். கோட்டை வாசலின் பிரம்மாண்டமான கதவுகள் அச்சமயம் சாத்தியிருந்தன.

வாசலில் நின்ற காவல்ர்கள் மக்களை ஒதுங்கச் செய்து, வீதி ஓரங்களில் நிற்கும்படி செய்து கொண்டிருந்தார்கள். மக்களும் ஒதுங்கி நின்றார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### வேதியர் சொன்ன ஆரூடம்

(நேற்றைய தொடர்ச்சி)

“என்ன பயம்? ஏன் பயம்?”

“அவர் சீக்கிரம் செத்து விடுவாரோ என்று பயப்படுகிறேன். அப்படி ஏதாவது ஆகிவிடுமோ? அப்படியானால் அவர் எப்போது சாவார்? எப்படிச் சாவார்? சாவதற்கு முன்னே ஏதாவது அடையாளம் தெரியுமா? தயவு செய்து இதையெல்லாம் ஆரூடமாக நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும்!” என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.

வேதியருக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. விட்டால் போதும் என்று இருந்தது அவருக்கு. எதையாவது சொல்லி விட்டு வேகமாகப் போய் விட வேண்டும் என்று எண்ணினார்.

ஏதேதோ சொல்லிப் பார்த்தும் பேதை விடாப் பிடியாக நின்றதால் எதையாவது சொல்லிவிட்டுப் போய் விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் வேதியர். அவன் தொந்தரவு தாங்காமல் கடைசியாக “ஆசன சீதம் ஜீவன் நாசம்” என்றார். அதற்கு விளக்கம் கேட்டான் பேதை.

“அய்யா! உன்னுடைய குருநாருக்கு எப்போது ஆசனம் குளிர்ந்து போகிறதோ அப்போதே அவருக்குச் சாவு நிச்சயம் என்று அர்த்தம்” என்றார் வேதியர்.

“ஓஹோ! குருவுக்கு ஆசனம் குளிர்ந்து காணப்பட்டால் அது அவர் செத்துப் போவதற்கு அடையாளமா?” என்று அவன் தன்னையே கேட்டுக் கொள்வதைப்போல் பேசிக் கொண்டான். விட்டால் போதும் என்று வேதியரும் ஓட்டமாக நடந்து போய் விட்டார். வெட்டிய மரக்கிளையை மடத்துக்கு இழுத்துப் போக, ஆலமரத்தை நோக்கி நடந்தான் பேதை.

அவன் மனத்தில் அந்த வேதியர் சொன்ன அந்த வாசகம் அப்படியே பதிந்துவிட்டது. “ஆசன



சீதம் ஜீவன் நாசம்!”

அதை அடிக்கடி தனக்குள் சொல்லிக் கொண்டே மரக்கிளையை இழுத்துக் கொண்டு மடத்துக்குச் சென்றான்.

கிளையை மடத்தின் பின்னே கிடத்தி விட்டு அவன் குருவை நோக்கி ஓடினான். தான் அந்த சாஸ்திரியிடம் கேட்ட ஆரூடத்தை ஆதியோடு அந்தமாக அக்கறையோடு கூறினான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் குருவுக்கு இடிவிழுந்ததைப் போல் வேதனை மிகுந்துவிட்டது. அவர் எதை எதையோ எண்ணிக் கலங்கினார்.

“அந்த சாஸ்திரி அதிகம் கற்றவராகத்தான் இருக்க வேண்டும். அவர் வாக்கு பொய்க்காது என்றுதானே தெரிகிறது. அவர் சொன்னபடியே பேதை சிறிது நேரத்திலேயே மரக்கிளையோடு விழுந்திருக்கிறானே, தரையில்! அதனால் எனக்கு அவன் சொன்ன ஆரூடமும் உண்மையாகத் தானே நடக்கும்?” என்று கவலை கொண்டார்.

குரு அவரும் தமக்குள் “ஆசன சீதம் ஜீவன் நாசம்” என்று அடிக்கடி முணு முணுத்துக் கொண்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை முடிந்தபின் தேரே என்றாலும் தெருவில் தான். – ராம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாருக்காக... யாருக்காக... கலாசார நிலையம் யாருக்காக...

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த வசந்தமாளிகை என்ற திரைப்படம் வெளிவந்த காலத்தில் அதுபற்றிப் பேசாதவர்கள் – கதைக்காதவர்கள் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு சிவாஜி கணேசனின் அபரிதமான நடிப்பு இருந்தது.

அதுதவிர *யாருக்காக... யாருக்காக... இந்த மாளிகை வசந்தமாளிகை யாருக்காக...* என்ற பாடலும் அதற்கான அசைவும் இன்னமும் ஆழ்மனப் பதிவில் வசந்தமாளிகைப் படத்தை பேணிப் பாதுகாத்து வருகிறது.

இதை நாம் கூறும்போது அதுசரி. இப்போது வசந்தமாளிகை படமும் அதில் வருகின்ற யாருக்காக... என்ற பாடலும் எதற்காக என்று நீங்கள் யாரேனும் வினவலாம்.

எல்லாம் காரணத்தோடுதான். ஆம் இந்திய மத்திய அரசினால் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது.

இந்திய அரசினால் யாழ்ப்பாண மண்ணில் அமையப்பெற்ற இக்கலாசார மத்திய நிலையம் நாளை 11ஆம் திகதி இந்திய அரசால் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இதன்பொருட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

தவிர, இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் தூதரக அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாண மக்களுக்காக யாழ்ப்பாண மண்ணில் அமையப்பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தை பொறுப்பேற்கின்ற சம்பிரதாய நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகம் அல்லது வட மாகாண நிர்வாகம் எந்தவகையிலும் பங்கேற்கவில்லை.

மாறாக, இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாண மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட மத்திய கலாசார நிலையத்தை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் விழாவை பெளத்த கலாசார அமைச்சே நடத்துகின்றது.

தவிர, கையளிக்கும் வைபவத்துக்கான அழைப்பையும் பெளத்த சாசன அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார்.

அதில் இந்திய மத்திய அரசினால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் மக்களின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கப்படவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, இந்திய மத்திய அரசு யாழ்ப்பாணத்தில் அமைத்த கலாசார நிலையம் பெளத்த சாசன அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படவுள்ளதா? அல்லது யாழ்ப்பாண மக்களின் பயன்பாட்டுக்குரியதாக, யாழ்ப்பாண மக்களிடம் அதன் நிர்வகிப்பு ஒப்படைக்கப்படுமா? என்பதுதான் இன்னமும் புரியாமல் உள்ளது.

என்ன செய்வது எங்கள் தலைமைகளின் பலயீனத்தை தென்பகுதி மட்டுமல்ல, இந்தியாவும் நன்கு புரிந்துள்ளது என்பதைத்தான் மேற்போந்த செயல் உணர்த்துகிறது.

பாவம் தமிழ் மக்கள். வசந்தமாளிகையில் வந்த சிவாஜி கணேசன் போல யாருக்காக... யாருக்காக... இந்த கலாசார நிலையம் யாருக்காக... என்று பாடுவதுதான் அவர்களின் தலைவிதியாயிற்று.

# வேலையற்ற இளம் பட்டதாரிகளை ஆசிரிய நியமனத்தில் இணைக்குக

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நியமனத்தினை வேலையற்ற இளம் பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டும் என வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவாக, நாட்டை அபிவிருத்தி அடையச்செய்யும் பட்டதாரிகளுக்கு சவால் உருவாகியுள்ளது.

அரசாங்கம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை இரத்துச் செய்துள்ளது. தனியார் நிறுவனங்கள் பட்டதாரிகளை நிராகரித்து வருகின்றன. சுயதொழிலை உருவாக்குவதற்கான முதலீடுகள் இன்றி வங்கிகளில் வட்டிக்குப் பணம்பெற்று சுயதொழிலை உருவாக்கவும் முடியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் எமது சமுதாயத்தின் வரிப்பணத்தில் கல்விகற்ற நாம் சமுதாய நலனுக்காக செயற்படாமல் இருப்பது எமக்கு குற்ற உணர்வினைத் தருவதோடு, பெற்றவர்களுக்கும், சகோதரர்களுக்கும் உரிய கடமைகளை நிறைவேற்ற முடியாமலும் எமது எதிர்காலத்துக்கான சேமிப்பையோ வாழ்க்கையைத் தொடங்குவதற்கான திட்டமிடலையோ உருவாக்க முடியாத சூழலிலும் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது எதிர்காலம் தொடர்பில் கேள்வியையும் அதன் வழியே விரக்தியையும் கொண்டிருப்பது பெரும் மனவேதனையைத் தருகின்றது.

ஆகவே, எமக்கான எதிர்காலம் மீட்சி பெறாதா? எனும் கவலையோடு அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை அறிந்தும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் சூழ் நிலைக்கு வந்துள்ளோம்.

நாம் அரசாங்கத்தால் கொடுக்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனத்துக்கு பட்டதாரிகள் தேர்வு இடம் பெற இருப்பதனை நன்கு அறிவோம்.

ஆகவே, இளம் பட்டதாரிகளாகிய எங்களின் மீது அக்கறை செலுத்தும் கடமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்குமென்பதையும் நாம் உணர்கின்றோம் என்றனர். (ம-7,33)

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் 26 ஆயிரத்து 506 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த 07 ஆம் திகதி வரை வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 51 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 545 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் 25 சதவீதமானவர்கள் ரஷ்யர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம்

### பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என பல தரப்பினரும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வர்த்தக சபை உறுப்பினர்கள், தொழில் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக்களை மீளாய்வு செய்ததன் பின்னர் ஆணைக்குழுவின் தீர்மானம் அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை வெளியீடு

(கொழும்பு)

அரச சேவையில் எந்தவொரு பதவியிலும் பணியாற்றும் 40 வயதுக்கு உட்பட்ட எந்தவொரு பட்டதாரியும் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்துக்கு அதிகபடியான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளுக்கு இந்த ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் ஏனைய வகுப்புகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூர்ச் சந்தையில் ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை அதிகபட்சமாக 240 ரூபாயாக அதிகரித்துள்ளது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொறுப்பான அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு கோதுமை மாவின் விலையை மக்கள் தாங்கும் அளவிற்கு குறைக்க வேண்டும்.

உள்ளூர்ச் சந்தையில் ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை அதிகபட்சமாக 240 ரூபாயாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 193 ரூபாயாக இருந்தது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் கோதுமை மா பிரதான உணவாக மாறியுள்ளது.

எனவே, நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் வர்த்தக அமைச்சு இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டும். முன்னதாக கோதுமை மாவின் விலையை குறைப்பதற்கான விடயத்தில் தலையிட்டமைக்காக வர்த்தக அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

ஆனால், இந்த திடீர் விலைவாசி உயர்வால், யாருக்கு தரகுக் கட்டணம் கிடைக்கும் என்ற சந்தேகம் உள்ளது, அப்பாவி மக்களுக்கு எரியும் பிரச்சினையாக இது உள்ளது.

பிரதான கோதுமை மா இறக்குமதியாளர்களிடம் இந்த மாஃபியாவை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இல்லை என்றால், பிரச்சினையில் தலையிட்டு, இறக்குமதி, இறக்கும்செலவு, மக்களுக்கு அரச சலுகைகள் என அனைத்து விவரங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லிற்கான உத்தரவாத விலையினை ஜனாதிபதி நிர்ணயிக்க வேண்டும்

## கிளிநொச்சி விவசாய அமைப்புகள் கடிதம்

(அக்கராயன்)

நெல்லிற்கான உத்தரவாத விலையினை நிர்ணயுங்கள் என கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் மாவட்ட சம்மேளனம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

தற்போது நாம் மிக பிரயாசப்பட்டு உற்பத்தி செய்த நெல் சராசரியாக ஒரு கிலோவுக்கு ரூபாய்.110 உற்பத்தி செலவாகின்றது. இந்த நெல்லினை தற்போது தனியார் வர்த்தகர்கள் ஒரு கிலோ ரூபாய்.66 இற்கு தான் கொள்வனவு செய்கின்றார்கள்.

இது எம்மை மிக மோசமாக பாதிக்கின்றது. இவ் விடயத்தினை நாம் துறைசார் திணைக்களங்களின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. தயவு செய்து தாங்கள் விவசாயிகளாகிய எமது வாழ்வியலை கவனத்தில் கொண்டு பின்வரும் விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க தயவாக வேண்டுகின்றோம். நெல்லிற்கு உத்தரவாத விலையினை நிர்ணயித்தல், நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவு செய்ய உடன் நடவடிக்கை மேற்கொள்ளல், தனியார் நெல் கொள்வனவாளர்களையும் உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற் கொள்ளல். மேற்படி விடயங்களில் தாங்கள் நேரடியாக கவனம் கொண்டு விவசாயிகளையும் நாட்டின் உணவு உற்பத்தியையும் பாதுகாக்க பணிவோடு வேண்டி நிற்கின்றோம் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)



கணபதி அறக்கட்டளை கீரீன்சோலர்ஹோல்டிங் லங்கா அமைப்பினரால் பொருளாதாரத்தால் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் இருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றும் மற்றும் கல்வி உபகரணங்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்-மகாலிங்கம்)

# நெல் அழிவுகளுக்கு இழப்பீடு வழங்குங்கள்

## விவசாயிகள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விளைந்த வேளாண்மைக்கு ஏற்பட்ட வெள்ள அழிவு தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் மாவட்ட சம்மேளனம் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர், கிளிநொச்சி கமநல காப்புறுதி பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி உள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அண்மையில் ஏற்பட்ட தொடர் மழை காரணமாகவும் மழையுடன் கூடிய காற்று காரணமாகவும் நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

பல ஏக்கர் வயல் நிலங்கள் அறுவடை செய்ய இயலாத நிலையிலும் மேலும் பல ஏக்கர் வயல் நிலங்கள் அறுவடை மேற்கொண்டாலும் அந்நெல் கால்நடை தீவனத்திற்கே பயன்படுத்தும் நிலையிலும் உள்ளன.

எனவே தயவு கூர்ந்து இவ் வயல் நிலங்களை பார்வையிட்டு இழப்பீடுகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகின்றோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை அழிவுகளை எதிர் கொண்டுள்ள விவசாயிகள் கமநல சேவை நிலையங் களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் தொழிற் சங்கத்தின் நிர்வாகசபை தெரிவிற்கான பொதுக் கூட்டமும் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள Green grass Hotel மண்டபத்தில் மஸ்கன் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த கூட்டத்திற்கும் நிகழ்விற்கும் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 300 |
| தக்காளி | 300 | 150 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 80 | 60 | 80 | 100 |
| கரட் | 150 | 250 | 200 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 150 | 200 | 160 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 180 | 150 |
| பாகற்காய் | 250 | 200 | 280 | 400 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 600 | 350 | 400 | 500 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 320 |
| பீற்றூட் | 100 | 150 | 150 | 140 |
| கறிமிளகாய் | 700 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1400 | 1200 | 1600 |
| போஞ்சி | 300 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 150 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 130 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 160 | 100 | 120 |


# இராசிபலன்

10.02.2023
தை 27, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முழுவதும்

அத்தம் முன்னிரவு 10.22 மணிவரை
சுபநேரம் 6.34-8.04 மணிவரை
இராகுகாலம் 11.04-12.34 மணிவரை


சந்திராஷ்டமம் -பூரட்டாதி, உத்தரட்டாதி.
அமிர்தசித்தம்

வளவன்



**மேஷம்**

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.




**ரிஷபம்**

அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




**மிதுனம்**

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.



**கடகம்**

கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.




**சிம்மம்**

குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் கனிவு பிறக்கும், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.




**கன்னி**

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.



**துலாம்**

ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்விர்கள்.




**விருச்சிகம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறலாம்.




**தனுசு**

செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செய்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள்.



**மகரம்**

ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டில் குதூகலம் காண வேண்டிய நாள்.



**கும்பம்**

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.



**மீனம்**

சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

விரும்பியது கிடைக்கவில்லை என்று வருந்தாதே. கிடைத்துள்ளதை விரும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் ஒருவரின்...

மேரி சரோஜா என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயாரைக் காணவில்லை எனத் தெரிவித்து சம்பவ இடத்திற்கு வந்திருந்த நபர் சடலமாக மீட்கப்பட்ட பெண் தனது தாயார் தான் என அடையாளம் காட்டியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்டு உடல் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ம-7,33,104)

## மகா சங்கத்...

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத் தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும் பௌத்த பிக்குகளையும் தூண்டிவிடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

வடக்கு தமிழ்ப்பிரதிநிதிகள் அனைத்தையும் கேட்கக்கூடாது. நடுநிலைமையாக அவர்கள் செயற்படவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 13 பிளஸை தருவதாக ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுக்கு உறுதியளித்தார். பசில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு 13 பிளஸை தருவதாக உறுதியளித்தார்.

இவ்வாறான உறுதிமொழிகளுக் குப் பின்னர்தான், இந்தப் பிரச்சினை நாட்டில் பூதாகரமானது என்றார். (ம-7)

*(மற்றுமொரு செய்தி உள்ளே)*

## பருத்தித்துறை...

தனிமையில் இருந்த பெண் தீயில் எரிந்த நிலையில் சடலமாக காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில், பருத்தித் துறை நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ம-7,60)

## 4 பொருட்களின்...

அரிசி மற்றும் ஒரு கிலோ கிராம் வெள்ளைப் பச்சையரிசி என்பவற்றின் விலை 5 ரூபாயினால் குறைக்கப்பட் டுள்ளது.

அதன் புதிய விலை முறையே 164 மற்றும் 179 ரூபாய் என அறிவிக்கப்பட் டுள்ளது.

மேலும், உள்ளூர் வெள்ளை நாடு ஒரு கிலோவும் 4 ரூபாயினால் குறைக் கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 180 ரூபாயாக உள்ளது.

ஒரு கிலோக்கிராம் கடலைப் பருப் பின் விலையும் 10 ரூபாயினால் குறைக் கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 305 ரூபாய் என லங்கா சதொச அறிவித் துள்ளது. (ம-7)

## ஹெரோயினை...

போதைப்பொருளை எடுத்துக்கொண் டிருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம்புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் கட்டளை பெற்று மறுவாழ்வு முகாமுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## இந்திய அமைச்...

மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச் சர் எல்.முருகன் மற்றும் அண்ணாமலை தலைமையிலான இந்திய அரசின் உயர்மட்டக் குழு பலாலி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந் தது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், யாழ்.இந்திய துணைத் தூதுவர், சிவசேனை அமைப்பின் தலைவர் ஆகியோர் இந்திய உயர்மட்ட குழுவினை மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தினை உத்தியோக பூர்வமாக கையளிக்கும்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இணை அமைச்சர்பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## யாழ்ப்பாண...

குறித்த நிகழ்வில் பங்குபற்றுவதற் காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மேலும் குறித்த வைபவத்தில் பங்கு பற்றுவதற்காக இந்திய அமைச்சர் எல். முருகன் அடங்கிய குழுவினர் ஏற்கெனவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இக்குழுவில் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையும் அங்கம் வகிக்கிறார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியாவின் தகவல் - ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் கலாநிதி எல்.முருகன், இலங்கையின் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இந்திய அரசின் நிதி உதவி மூலம் கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார மையத் திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2015 மார்ச் சில் அடிக்கல் நாட்டினார்.

இந்த மையம் அருங்காட்சியகம், 600 பேர் வரை அமரக்கூடிய நவீன திரையரங்கு வசதியுடன் கூடிய அரங்கம் 11 தளங்களுடன் அமைந்துள்ளது. (ம-7,33,104)

## எரி...

மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும்.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மின் மற்றும் எரிபொருள் கட்டணத்தை அதிகரித்தால் அது ஆளும் தரப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிவோம்.

அரசியல் நோக்கத்திற்காக எம்மால் பொய்யாகச் செயற்பட முடியாது என மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (ம-7)

## நாட்டில் மீண்டும்...

டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் அபாயம் காணப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் எனக் கூறுகிறார்கள். ஆனால், காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு விட்டன.

காணியொன்றை குத்தகைக்கு விடும் மற்றும் அரச காணிகளை நிர்வகிக்கும் அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்குத்தான் உள்ளன.

அத்தோடு, ஜனாதிபதி, ஒரு காணியை பரிசாக வழங்க வேண்டும் என்றாலும், விற்க வேண்டும் என்றாலும், மாகாண சபையின் ஆலோசனைக்கு அமைவாகவே அதனை செய்ய வேண்டும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1481
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 3 6 2 3 8 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.02.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1056
X 06 36 74 80
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 3268
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Q 36 55 57 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1374
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள்
X 15 21 31 35 54

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 335
மகரம் 32 40 49 55 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/09
சீட்டிழுப்பு இலக்கம் 5026
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 9 4 0 5 4 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2001 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.02.09 | தினம் வியாழக்கிழமை
D 31 52 60 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,757,620/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.09
சீட்டிழுப்பு இல : 4162
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,304,580/-
வெற்றி இலக்கங்கள் 50 63 64 69
ஆங்கில எழுத்து P
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,206,694/-
திகதி 2023-02-09
வெற்றி வாரம் 3713
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 01 28 29 51 கும்பம்
3762
075
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,530,900/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 32 02 17 44 54
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1177
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.02.09 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 304,557,104.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 569 | திகதி 2023-02-09 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 11 28 37 | ராசி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,867,136/-
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1827
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.09
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,420,240/-
வெற்றி இலக்கங்கள் 08 10 21 61
ஆங்கில எழுத்து C
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.5 ஆயிரம் போலி நாணய தாள்களுடன் இருவர் கைது

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றில் அப்பிள் கடை ஒன்றில் ஐயாயிரம்ரூபாய்போலிநாணயத்தாளை வழங்கி அப்பில் வாங்க முயற்சித்த அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உட்பட இருவரை நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதுடன் ஐயாயிரம் ரூபாய் போலி நாணயத் தாள்கள் மூன்றினையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகம் ஒன்றில் கல்விகற்றுவரும் அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மாணவன் அவரின் 24 வயதுடைய நண்பனுடன் சம்பவதினமான நேற்று பகல் அக்கரைப்பற்று கல் முனை வீதியிலுள்ள ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ள அப்பில் கடைக்கு சென்று அப்பிளை வாங்கி விட்டு 5 ஆயிரம் ரூபாய் தாள் ஒன்றை கொடுத்துள்ளார்.

இதனையடுத்து கடை உரிமையாளர் இது போலியான தாள் என்பதையறிந்து உடனடியாக பல்கலைக் கழக மாணவனை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

அவருடன் வந்த நண்பன் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் அவரை பொலிஸார் கைது செய்தனர். (ம-7)

# தாயும் மகளும் சடலமாக மீட்பு

படுக்கை அறையில் மர்மமான முறையில் உயிரிழந்த தாய் மற்றும் மகளின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கினிகத்தேனை- பேரகஹமுல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய தாயும் 30 வயதுடைய மகளுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்து சில நாட்களாக எவரும் வெளியே வராமை மற்றும் அவர்கள் வசித்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வருவதாக பிரதேச வாசிகள் கினிகத்தேனை பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து பொலிஸார் குறித்த வீட்டை உடைத்துச் சென்று உள்ளே பார்த்த போது. தாயும் மகளும் சடலங்களாக கட்டிலிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்பதுடன். உயிரிழந்த பெண்ணின் கணவனும் மகனும் கொழும்பில் தொழில் செய்து வருவதாகவும் பொலஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# பொது மக்களுக்கு மத்தியவங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில்உள்ள அனைத்து மக்களுக்கும் இலங்கை மத்திய வங்கி விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாட்டு மக்கள் தங்களுக்கு வரும் மோசடியான குறுஞ்செய்தி தொடர்பில் அவதானமாக இருக்குமாறு மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தங்களது வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கி அட்டைத் தகவல்களின் பாதுகாப்பு குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு நாட்டு மக்களுக்கு மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

மேலும். மக்கள் தங்கள் பயனர் Username, Password, PIN, OTP மற்றும் வங்கி கணக்கு தொடர்பான மேலதிக தகவல்களை வேறு எந்த தரப்பினருடனும் பகிர்ந்து கொள்வதை தவிர்க்குமாறு மத்திய வங்கி மக்களுக்கு அறிவித்துள்ளது. (ம-7)

# வங்கியில் வைப்பு செய்த பணத்தை மீளப்பெறும் போது புதிய வரி அறவீடு

(கொழும்பு)

வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீளப்பெறும்போது 50 ரூபாய் வரையில் வரி அறவீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வங்கிப் புத்தகம்மூலம்இரண்டு லட்சம் ரூபாயிற்கு குறைந்த தொகையை மீளப்பெறும் போது 15 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் வணிக வங்கிகள் வரி அறவீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி வாடிக்கையாளர் ஒருவர் சேமிப்பு கணக்கு புத்தகத்தைப் பயன்படுத்தி வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெற்றுக் கொண்டால் அதற்கு நிகரான தொகை வரியாக அறவீடு செய்யப்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. (ம-7)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4

வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.

நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தரகர் தேவையில்லை.

(14454)

தொடர்புகளுக்கு :- 076 690 6272



## பெயர் மாற்றம்

கௌதாரிமுனை பூநகரி இல் வசிக்கும் உ.பிறைச் செல்வன் ஆகிய எனது பெயரை இன்று முதல் உ.பிரதீபன் என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என்று இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உ.பிரதீபன்

(14558)



## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD VICTORY MUST

கணித விஞ்ஞானப் பிரிவுகள்

2023 Revision Classes

Tamil & English Medium

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

Physics – R.Kumaran, R.Kugen

Chemistry – Dias, K.T.Sivakumar

Bio – N.T.Gajenthiran

Com.Maths – K.Ainharan, G.V.Khariharan

ஆரம்பம் 23.02.2023 (வியாழக்கிழமை)

10.02.2023ஆம் திகதி தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படும்.

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு

021 221 6690, 077 336 4030, 075 836 4055, 077 336 4055

அலுவலக நேரம்:- 8.00 am - 5.00 pm

(C-5892)



## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

மாலுசந்தி, அல்வாய்.

2023ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் தரம் 06 ஆரம்பம்.

10.02.2023 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு

தொடர்பு :- 021 226 3206, 077 309 5176, 077 925 0105

(C-5935)



## பௌதிகவியல் (Physics)

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (Personal), குழுவாகவும் (Group) கற்பிக்கப்படும்.

தொடர்பு - 076 157 0107

(14554)



## A/L அரசியல் விஞ்ஞானம்

2023, 2024 பிரிவுகள்

ஆசிரியர் - திரு. G.குணசீலன் (B.A (Hons), Pol.spe, P.G.D.E, SLTS-I

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

T.P - 077 459 8440

(14565)



## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd - Jaffna.

077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14563)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மாவிட்டபுரம், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

(C-5936)



## சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS (CHOLA INTERNATIONAL (PVT) LTD) உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்.

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

V2 TRAVELS 0777-068-777

(C-5936)



## புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.02.2023

வங்கியியல் கற்கைநெறிகள்

Banking Courses IABF & DABF

(Tamil & English Medium)

Qualification:- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths.

கணக்காளர் கற்கைநெறிகள்

Chartered Accounting Courses

Business level - 1, II

(Tamil & English Medium)

Qualification:- G.C.E A/L 3 Passes.

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு

aat (Sri Lanka) AA1, AA2, AA3)

Qualification:- G.C.E O/L 6 Passes

Medium - Tamil & English

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

Certificate Course in English

21 Batches have successfully Completed the Course

Further Details: Jaffna College

Undergraduate Dept.

464, Hospital Road, Jaffna.

021 222 3382, 021 222 9149

077 440 5917

(C-5930)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org